**செ.வெ.எண்–51** **நாள் : 18.11.2017**

**கரூர் – மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான தடகளம் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது. இப்போட்டிகளில் அனைவரும் கலந்து கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கரூர் மாவட்டத்தின் சார்பாக, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு 27.11.2017 முதல் 29.11.2017 வரை கீழ்கண்ட விவரப்படி விளையாட்டுப் போட்டிகள் காலை 8.30 மணிக்கு நடைபெற உள்ளது. இது குறித்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில் கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் ஆண்கள் / பெண்கள் இருபாலருக்கும் 27.11.2017 அன்று மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் **கூடைப்பந்து, கையந்துபந்து, கபடி** மற்றும் **கால்பந்து** போட்டிகளும், 28.11.2017 அன்று **தடகளப்** போட்டியும், 29.11.2017 அன்று **வளைகோல்பந்து, டென்னிஸ், டேபிள் டென்னிஸ்** மற்றும் **இறகுப்பந்து** போட்டிகள் செட்டிநாடு பொறியியல் கல்லூாரி மைதானத்திலும், நீச்சல் போட்டிகள் வேலம்மாள் மெட்டிரிக் மேல்நிலைப் பள்ளியிலும் நடைபெற உள்ளது.

போட்டியில் கலந்து கொள்பவர்கள் 31.12.2017 அன்று 21 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். (01.01.1997 அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும்) மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தமிழ்நாட்டில் குறைந்தது ஐந்து ஆண்டுகள் வசித்து வருவதற்கான புகைப்படத்துடன் கூடிய சான்றினை (Ration card Xerox/ Voter ID Xerox/ Driving License Xerox / School Mark Sheet Xerox / Age Proof / Transfer Certificate Xerox / Aathar Xerox) இதற்கான சான்றிதழ்கள் கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்) மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் சொந்த மாவட்டத்திற்காகவோ / பணிபுரியும் மாவட்டத்திற்காகவோ / பள்ளி கல்லூரியில் படிக்கும் மாவட்டத்திற்காகவோ விளையாட அனுமதிக்கப்படுவார்கள்.

மாவட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று மாநில போட்டிக்கு தகுதி பெறுபவர்கள் கண்டிப்பாக இருப்பிடச் சான்றிதழ் மற்றும் வசிப்பிடச் சான்றிதழ் இதில் ஏதேனும் ஒன்றையும் மற்றும் ஆதார் அட்டை கண்டிப்பாக சமர்பிக்க வேண்டும். வெற்றி பெற்ற வீரர் / வீராங்களைகளுக்கு வழங்கப்பட வேண்டிய பரிசுத்தொகை ரூ.1000/–, ரூ.750/– மற்றும் ரூ.500/–க்கான பரிசுத் தொகையினை **D.B.T. (DIRECT BENEFIT TRANSFER)** முறையில் வழங்க வேண்டியுள்ளதால், போட்டியில் பங்கு பெறுபவர்கள் தங்கள் பெயரில் உள்ள **BANK NAME, BANK ACCOUNT NUMBER, I.F.S,C. Code, MICR CODE, BRANCE NAME** தங்கள் பெயரில் உள்ள வங்கிக் கணக்கு புத்தகத்தில் ஜெராக்ஸ் நகல் கண்டிப்பாக சமர்பிக்கப்பட

வேண்டும். வங்கி கணக்கு ஆவணங்கள் சமர்பிக்காதவர்களுக்கு பரிசுத் தொகை வழங்க இயலாது.

தடகளப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் ஏதேனும் இரண்டு போட்டியில் மட்டுமே பங்கேற்க வேண்டும். தடகளம் மற்றும் குழுப் போட்டியில் மாவட்ட அளவில் தேர்வு செய்யப்படுபவர்கள் மட்டுமே மாநில போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

ஆண்களுக்கு 100 மீ., 800 மீ., 5000 மீ., 110 தடை தாண்டும் ஓட்டம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், மும்முறை தாண்டுதல், குண்டு எறிதல், வட்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல் ஆகிய தடகளப் போட்டிகளும், பெண்களுக்கு 100 மீ., 400மீ., 3000 மீ., 100 மீ., தடைதாண்டும் ஓட்டம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், மும்முறை தாண்டுதல், குண்டு எறிதல், வட்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகளும், நீச்சல் போட்டி (ஆண்கள் மற்றும் பெண்கள்) 50 mts, 100 mts, 200 mts, 400 mts free style, 50M Back Stroke, 50 mts, breast stroke, 50 mts butterfly strock and 200 mts. Indidual Medley.

போட்டியில் கலந்து கொள்ளும் அனைவரும் கண்டிப்பாக காலை 8.30 மணிக்கு போட்டிகள் நடைபெறும் மையத்திற்கு வந்து தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தாமதமாக வரும் வீரர் / வீராங்கனைகள் போட்டியில் கலந்து கொள்ள கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் விவரங்களுக்1 மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மாவட்ட விளையாட்டரங்கம், நீதிமன்றம் பின்புறம், தாந்தோன்றிமலை 639005 என்ற முகவரி (அல்லது) அலுவலகத் தொலைபேசி எண்.7401703493 (அல்லது) 9942754053 இந்த எண்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, கரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளி / கல்லூரி / தனியார் நிறுவனங்களில் பயிலும் / பணிபுரியும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் மேற்கண்ட தேதிகளில் போட்டிகள் நடைபெறும் மையங்களில் தங்களது பெயர்களை +உடனடியாக பதிவு செய்து கொண்டு பயன்பெற வேண்டும் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவிக்கின்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**